# வலைக்குள் மலர்ந்த வனப்பு

பாலமுனை பாறூக்

**தமிழ்நெஞ்சம்**
59, rue des Entrechats , 95800 Cergy - France

நூலின் பெயர் : வலைக்குள் மலர்ந்த வனப்பு
வகை : கவிதை
மொழி : தமிழ்
முதற்பதிப்பு : ஜூ லை 2017
பக்கங்கள் : 96
ஆசிரியர் : பாலமுனை பாறூக்

விலை : 250 LNR

வெளியீடு : பர்ஹாத் வெளியீட்டகம்,
14A, பர்ஹானா மன்ஸில்,
பாலமுனை- 03.
32354.
இலங்கை

ISBN : 978-955-99311-5-7

# வாழ்த்துரை

*பாலமுனை பாறூக் கென்னும் பேரன்*
*பால்யமுதல் பாக்களிலே வீரன்*
*படைத்திட்டான் பதம் என்றே*
*பசும் கவிதை தொகுப்போன்றே*
*படித்தின்புற வாங்கித்தான் பாரேன்*

*என்று 30 வருடங்களுக்கு முன் வாழ்த்தினோம்..*
*கடந்த வருடம் பாவேந்தல் என்னும்*
*பட்டமளித்து மகிழ்ந்தோம் ...*
*தோட்டுப் பாய் மூத்தம்மா வைப் போல*
*இதையும் மறந்து விடாமல்*
*சேர்த்துக் கொள்ளுங்கள்.*
*வாழ்த்துகள்.*


தீரன் ஆர்.எம். நவ்சாத்
செயற் சபை முதல்வர்
அபாபீல்கள் கவிதா வட்டம் - சாய்ந்தமருது

# பாவாழ்த்து

பாவுக்கு வேந்தன் அவன் பாவேந்தன்
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்

ஊருக்குள் நடப்பதையும்
உணர்வுகளில் தெளிவதையும்
பாவுக்குள் ளாக்கிடுவான் பாவேந்தன்
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்

யாருக்கு மஞ்சாது
அங்கதமாய் நம்மவரின்
பாவுக்குள் சேதி சொல்வான் பாவேந்தன்
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்

குறும்பா முதற் கவிதை
அரும்பா வகை தெரிந்த
பெரும்பா வலன் அவனே
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்

பார்வையிலு மோர்கவிதை
பண்ணிசைக்கு மின்னி சையில்
தீந்தமிழை ஆய்ந்தவனே பாவேந்தன்
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்

தோட்டுப்பாய் மூத்தம்மா
தொகுத்தளித்த காவியத்தின்
ஆர்த்த புகழாசிரியன் பாவேந்தன்
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்

மரபுநெறி தவறாது
உரிமையுடன் தமிழமுதம்
பருகப் பகிர்ந்திடுவான் பாவேந்தன்
பாலமுனை பாறூக்கோ நாவேந்தன்

பாவலர் சாந்திமுகைதீன்

# அணிந்துரை

*தமிழ் இலக்கியங்களைக் காலத்துக்கேற்பப் பலவாறு வகைப்படுத்தி வைத்துள்ளார்கள். சங்க காலம், சங்கம் மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், தற்காலம் என்று ஒரு வகை. பழங்காலம், இடைக்காலம், தற்காலம் என்பது இன்னொரு வகை. வீரயுகக் காலம், நீதிநெறிக் காலம், பக்திநெறிக் காலம், காப்பிய காலம், உரைநடைக் காலம்... மற்றொரு வகை. இவ்வாறு இன்னும் பலவிதமான வகைப்படுத்தல்களும் உள்ளன. இருபதாம், இருபத்தோராம் நூற்றாண்டு இலக்கியங்களும் இவ்வாறான வகைப்படுத்தல்களுக்கு அவ்வப்போது உள்ளாகியபோதிலும் இன்னும் பல வகைப்படுத்தல்களை வேண்டி நிற்கின்றன. இவ்வாறான வகைப்படுத்தலின்போது "இணையக் காலம்" என்பதும் சேர்க்கப்பட்டு தனியான ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டிய தேவையுள்ளது.*

*பதினெட்டாம் நூற்றாண்டின் பின்னர், காலத்துக்குக் காலம் தமிழிலக்கியத்தில் பல்வேறு மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டுவந்துள்ளதைக் காண்கின்றோம். அச்சியந்திரத்தின் வருகை, ஆங்கில மொழிப் பயிற்சி போன்றவை இம்மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தியதையும் நாமறிவோம்.*

*ஒருவர் தனது ஆக்கமொன்றை வெளியிட வேண்டுமாயின், அதனைக் குறித்த ஊடகத்துக்கு அனுப்பிவைத்து நீண்ட நாட்கள் காத்திருப்பதும் அதனை அந்த ஊடகம் திருத்தங்கள் செய்த பின்னர் வெளியிடுவது அல்லது நிராகரிப்பதும் அரை நூற்றாண்டுக்கு முன்னர் தொடங்கி இன்றுவரை நடைமுறையிலிருப்பதுதான். இதனால், எழுத்தாளரொருவர் அவ்வப்போது சில ஆக்கங்களையே வெளியிடும் வாய்ப்பே கிடைத்தது. 1970களின் பின்னர் இந்த நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டன. எழுத்தார்வம் கொண்டோர், தனியாகவும் சிறு குழுக்களாக இணைந்தும் இலக்கியச் சிற்றேடுகளையும் சிறு பிரசுரங்களையும் வெளியிடும் முயற்சிகளில் ஈடுபடலாயினர். இவ்வாறான நடவடிக்கைகள் தமிழகத்தில் அதிகமாகவும் அவற்றின் உந்துதல் காரணமாக இலங்கையில் சிறு அளவிலும் காணப்பட்டன. 1980களில் இவ்வாறான வெளியீட்டு முயற்சிகள் இலங்கையில் அதிகரித்தன. ரோனியோ அச்சுப் பதித்தல் மூலமும் அச்சேற்றல் மூலமும் இலக்கியச் சிற்றேடுகளும் கவிதைத்*

தொகுப்புகளும் இக்காலப் பகுதியில் பெருமளவு வெளிவந்தன. புதிதாக எழுத்துத் துறைக்குள் நுழைவோர் இவ்வாறான முயற்சிகள் மூலம் தமது எழுத்துக்களை உடனுக்குடன் அச்சேற்றியதோடு அதிக அளவில் எழுதும் வாய்ப்பையும் பெற்றனர்.

இணையப் பயன்பாடு பரவலாகிய பின்னர் இலக்கியச் சூழலில் பாரிய மாற்றங்களை நாம் அவதானிக்கின்றோம். இணையத் தளங்கள், வலைப்பூக்கள், முகநூல் முதலானவை கருத்து வெளியிடுவோருக்கு வரப்பிரசாதமாகவே ஆகிவிட்டன. இலக்கிய ஆக்கங்களில் ஈடுபட விரும்புவோர் தாம் எழுதுவனவற்றைச் சுதந்திரமாகவும் உடனுக்குடனும் உலகம் முழுமைக்கும் எடுத்துச் செல்லும் வாசல்கள் திறந்துவிடப்பட்டுள்ளன. புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் எண்ணிம (Digital) வடிவில் வெளியிடும் வாய்ப்பும் ஏற்பட்டுவிட்டது. இலக்கியப் பிரதியாக்கத்தில் முதிர்ச்சி பெற்றவர்களும் முதிர்ச்சியடையாதவர்களும் இந்த வாய்ப்புகளையெல்லாம் தன் வயப்படுத்திக் கொண்டுள்ளதைக் காணலாம். எழுதுவோரின் எண்ணிக்கையும் பிரதிகளின் எண்ணிக்கையும் பல்கிப் பெருகியுள்ளன. மறுதலையாக , அறிமுக எழுத்தாளர்கள் பலர் தம் கருத்துகளையும் சிந்தனைகளையும் வெற்று வார்த்தைகளில் எழுதி அதனையே கவிதை என்றும் இலக்கியமென்றும் கருதி அவசரக் கோலத்தில் தரவேற்றம் செய்துவிடுவதும் அதை மேலோட்டமாகப் படித்துவிட்டு 'அபாரம், அற்புதம்' என்று புகழ் பாடிச் சான்றிதழ் வழங்கப்படுவதும்கூட பெருமளவில் நிகழ்கின்றது. இது எழுத்துத் துறையின் புதிய வரவுகளைப் பிழையாக வழிநடத்தும் ஆரோக்கியமற்ற செயற்பாடாக அமையலாம்.

இலக்கியச் செயற்பாடுகளுக்காக இணையத்தையும் பயன்படுத்திக் கொண்டிருப்போரில் கவிஞர் பாலமுனை பாரூக் குறிப்பிடத்தக்கவர். இலக்கியச் செயற்பாடுகளில் ஏறக்குறைய அரை நூற்றாண்டு அனுபவம் கொண்டவர். அவரின் பல்வகையான ஆக்கங்களை உதிரிகளாகவும் நூல்களாகவும் படித்துள்ளோம். பிற ஊடகங்களைப் பயன்படுத்திக்கொண்டது போன்றே முகநூலையும் ஏற்ற வகையில் அவர் பயன்படுத்திவருகின்றார். அவர் முகநூலில் எழுதிய கவிதைகள் இப்போது நூல்முகம் காட்டுகின்றது.

யாப்பிலக்கணம் தழுவியும் தழுவாமலும் பல்வேறு வடிவங்களில் கவியாக்கும் ஆற்றல் கொண்ட பாலமுனை பாரூக், முகநூலிலும் அவ்வாறே பல்வேறுபட்ட கவிதைகளைத் தந்துள்ளார். சமூகம், சமயம், அரசியல், அழகியல் எனப் பல்வகை சார்ந்த சிறிதும் சற்றுப் பெரிதுமான கவிதைகள் வெண்பா, குறும்பா, சிந்து, கும்மி, புதுக்கவிதை போன்ற வடிவங்களில் அமைந்துள்ளன.

*முக்காட்டு மேகம் மறைத்த முழுநிலவு*
*அக்காலை வேளையிலென் ஆச்சரியம் - சொக்கிவிட்டேன்*
*பாதி தெரிந்தமுகம் பால்வெண்மை உன்வதனச்*
*சோதி எனைஈர்த்த தேன் ?*

*போன்ற கவிதைகளில் அழகியலையும்*

*பசி நெருப்பு, இளமையில் கல், சிறகிழந்த சிட்டு போன்ற கவிதைகளில் சமூக அவலங்களையும் நாங்கள் காங்கிரஸ்காரர்கள், பறந்தது காக்கா போன்ற கவிதைகளில் அரசியலையும்*

மாப்பிள்ளை ஊர்வலத்தில் எடுப்பாம்
வழிமுழுதும் பாவாடை விரிப்பாம்
மாப்பிளையைக் கண்டதுமே
மயங்கினளாம் மாமி, இவர்,
மாமியுடன் படித்ததொரே வகுப்பாம்!

*போன்ற கவிதைகளில் நகைச்சுவையும் பொன்னாடை , கவிஞன் போன்றவற்றில் நையாண்டியையும் காண முடியும்.*

கூரை இறந்து ரிச்சி
குடிசச் சுவர் கரஞ் சிரிச்சி
தாழ்ப்பாள் அறுந் திரிச்சி
தங்க வேற இடமி ரிக்கா

*போன்ற கவிதைகள், நாட்டார் பாடல் வடிவில் அமைந்து உள்ளத்தைக் கவர்ந்திழுப்பவை.*

*ஒரே கருப்பொருளை வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தும் முயற்சியையும் காண முடிகின்றது.*

பக்கத்தில் படுத்திருந்த மாது
பார்வதியாள் அவர்மனைவி சாது
நித்திரையில் அவள்கணவர்
நித்தியாவென் றரற்றியதால்
பத்தினியாள் மிரண்டவரோ கோது!

*என்ற குறும்பாவை,*

“பக்கத்தில் பார்வதியாள்
படுத்திருந்தாள் கணவரொடு
பதிவிரதை மனைவியவள் சாது
நித்திரையில் கணவரவர்
நித்தயாவென் றரற்றியதால்
பத்தினியாள் மிரண்டவரோ கோது!”

“பக்கத்தில் படுத்திருந்த மாது அவள்
பார்வதியே குணவதியே சாது அட
நித்திரையில் ஏனழைத்தார்
நித்தியாவென் றேகணவர்
சாது மிரள கோது! ”

*போன்ற பல்வேறு வடிவங்களில் எழுதியிருப்பது யாப்பியலில் அவருக்குள்ள பயிற்சியையும் தேர்ச்சியையும் காட்டுகின்றது. கவிஞர் பாலமுனை பாரூக் எழுதிய இக்கவிதைகளை முகநூலில் வாசித்திராதவர்களுக்கும் மீள்வாசிப்புச் செய்வோருக்கும் இத்தொகுப்பு விருந்தாக அமையுமென்பது என் நம்பிக்கை.*

*ஜவாத் மரைக்கார்*
*பிரதிக் கல்விப் பணிப்பாளர்,*
*(ஓய்வு நிலை)*
*புத்தளம், இலங்கை*

# சிறப்புரை

*தமிழர்களை வணங்குகிறேன்*

*ஆலமர நிழலின் கீழ் விழுந்த ஒரு சிறு விதை போலவே நானும். தமிழ் இலக்கிய மாவானில் மலரப் போகும் இந்த "வலைக்குள் மலர்ந்த வனப்பு" கவிதை புஸ்தகம் வாசிப்பாளர்களிடத்திலே ஒளிர என் இதயம் கனிந்த வாழ்த்துகள்.*

*அவ்வக்கால சூழலின் பதிவுகளே இலக்கியமாகும். ஆகையினால் தான் இலக்கியங்களை வரலாற்றின் பொக்கிசம் என்கிறார்கள் வரலாற்று அறிஞர்கள். யாரும் சொல்லிடாத கருத்தை சொல்லிட முடியுமா? என்ற கேள்வி எனக்குள் எழும். ஆனால் சொல்கிற முறையில் வித்தியாசத்தையும் கவர்ச்சியையும் சிந்தனையையும் தரலாம்.*

*"நீரளவே ஆகுமாம் நீராம்பல்" என்று என் பாட்டி ஔவை சொல்வதை போல ஒரு தேசத்தில் எத்தனை கவிஞர்கள் எழுத்தாளர்கள் நூல் வாசிப்பாளர்கள் இருக்கிறார்களோ அதை பொருத்தே அத்தேசத்தின் அறிவைக் கணக்கிடலாம்.*

*"எனக்குத் தொழில் கவிதை" என்று வீரியமிக்க வார்த்தைகளால் வெள்ளைக்காரனைச் சுட்டெரித்தவன் பாரதி. வெள்ளைக்காரன் பாரதிக்கு தமிழ் நாட்டிலே வாழ்வதற்கு தடை போடவில்லை. 'பாரதி இனி நீ எழுத கூடாது' என்றே தடைபோட்டான். பாரதியின் எழுத்து தேச உணர்வைக் கொடுத்தது. ஆக கவிதையோ கட்டுரையோ தேச மாற்றத்தை உண்டு பண்ணுகிறது என்பது சத்தியமான உண்மை.*

*தேசம் கடந்து சென்றாலும் மொழியையும் தேசத்தையும் மறக்காமல் வாழும் வாழ்க்கை இருக்கிறதே அது அழகான வாழ்க்கை ஆகும். கலைச் செல்வங்களை கொணர்ந்து கொண்டிருக்கிற தமிழ் நெஞ்சங்களை வணங்குகிறேன்.*

*கவிதை என்பது காகிதத்தை அலங்கரிக்கிற கருப்பு மை அல்ல. கவிஞனின் இதய கருவின் மை. கவிஞன் உணர்கிற ஒன்றினை எழுத்துகளால் உயிர்த்தெழ வைக்கிறான். அங்கு அனுபவம் பேசப்படுகிறது. கவிதைக்குக் கருத்து முக்கியமா? இல்லை அழகு அவசியமா? என்று கேட்டால் அழகாக எடுத்துச் சொல்லும் கருத்தே முக்கியம் என்று சொல்வோம். அதுதான் கவிஞனுக்கு வாகை சூட்டுகிறது என்றும் பகர்வோம்.*

*பாவேந்தல் பட்டம் பெற்ற ஐயா பாலமுனை பாரூக் அவர்களுடைய கவிதை நடை பாவேந்தரின் கவிதை நடை போலவே ஒரு சில கவிதைகள் இருப்பதை காண முடிகிறது. கவிதைக்குப் பொய்யழகு என்பார்கள். ஆனால் இந்நூலின் கவிஞர் பல கவிதைகளில் உண்மையையே அழகாக்கி இருக்கிறார். நூலின் முதல் கவிதையே மலர்ச்சி என்று ஆரம்பிக்கிறது.*

கருத்தினிலும் சொற்களிலும் உணர்ச்சி
கரைபுரளும் கவிதையதே கவர்ச்சி
பொருத்தமிலா வடிவம்
பொருந்திவரா படிமம்
தருபவரால் கவிபெறுமா மலர்ச்சி

*புதுக் கவிதைக்கு வரைவிலக்கணம் தந்த தமிழ் அறிஞர்களின் கருத்தோடு இவ்வரிகளையும் சேர்த்து கொள்ளலாம். விமர்சனம் என்கிற தலைப்பில் அட்டை நல்லா இருக்கு காகிதம் தரமா இருக்கு "உள்ளதா ஐயா உள்ளே கவிதை" என்று கேட்கும் போது அர்த்தமற்ற கவிதைகளை இழிவுப்படுத்தி விடுகிறார் கவிஞர்.*

*கூழ்முட்டைகள் என்கிற கவிதையில் கோழி இட்ட முட்டை கூழ்முட்டை என்று தெரிந்ததும் வீட்டுக்காரி கீழே தள்ளி உடைத்து விடுகிறாள் என்று கவிஞர் சொல்லும் போது இங்கே கூழ்முட்டைகளுக்கு மதிப்பில்லை என்று மனம் மெல்ல நினைக்க ஆரம்பித்தது. ஆழ் மனத்திலே அன்பிலை என்றால் அமைதி கெட்டு விடும் என்ற உண்மையான வரிகவிஞரின் உள்ளத்திலே பிறந்திருக்கிறது.*

இப்பொழுதும் நாங்கள் வந்திருப்பது
ஒன்பதாம் (9) இலக்க அறைதான்
ஆணி கழன்று
அது ஆறாகத் (6) தெரிந்தது *என்று ஆட்சி என்கிற கவிதையில் நேர்மையற்ற ஆட்சியாளர்களின் பேடிமைத் தனத்தை சுட்டுகிறார் போல.*

"உயரத்தில்
பறக்கிறது கொடி
தொட்டு விட முடியாத படி
இன்னும் தான்
பிரிக்கிறதே

இனவாதக் கொசுக்களின் கடி” என்று இனவாத அரசியலையும் வெறியையும் இப்படி படிமப்படுத்தி கூறி இருப்பது வித்தியாசமாகத் தெரிகிறது. பெற்ற மனம் காதல் லீலை போன்ற கவிதைகள் நடப்பியலைப் பேசுவதை போல இருக்கிறது.

வாசித்தால் எந்தச் சவாலையும் சமாளிக்கும் ஆற்றல் வரும். ஆற்றல் கொடுக்கும் என்கிறார் கவிஞர். உண்மை தானே. வாசித்தால் பிறவியே வரும்.

நாசுக்காக அரசியலை நசுக்கி எடுக்கிறார் கவிஞர். அது அங்கதமாக இருக்கிறது. நிறைவெறி, முகநூல் மேனியா என்பன போன்ற புது சொற்களைக் கையாண்டு இருக்கிறார். இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்பதை புரிந்து கொள்ள அந்தக் கவிதைகளை வாசித்தால் போதும்.

“உழைப்பாளர் தினமாமே

ஓ... ஓ.... நம்பு” என்று கேலி சொல்ல வரவில்லை அவர். உழைப்பாளர் தினத்தை முதலில் முதலாளிகள் தான் கொண்டாட வேண்டும் என்று விழிப்புணர்வு கொடுக்கிறார்.

பெண்கள் போதைக்கு அடிமை ஆவதையும் நாய்க்கு இருக்கும் கரிசனம் கணவனுக்கு வரவில்லை என்றும் பரிதாபப்படுகிறார். மகனுடைய கணிதப் புத்தகத்தில் காசை ஒளித்து வைக்கும் தந்தையைப் பற்றி சொல்லி இருப்பது நல்ல உத்தியாகத் தெரிகிறது. மகன் புத்தகத்தையும் எடுப்பதில்லை. காசையும் எடுப்பதில்லை.

இலக்கண முறையிலும் புதுக் கவிதை வடிவிலும் பேச்சு வழக்கிலும் கவிதை நூல் அமைந்திருப்பதால் அதில் கவிஞருடைய பன்முகம் தெரிகிறது. மேலும் பல கவி தந்து பாரை உயர்த்திட வேண்டுமாய் கவிஞர் ஐயாவையும் தமிழ்நெஞ்சம் இல்லத்தாரையும் வாழ்த்தி வணங்குகிறேன்.

இப்படிக்கு
தமிழின் ஆசியோடு

இசைவாசி க.சிவராஜ்

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
திருச்செங்கோடு
இமெயில்: esaivasi2005@gmail

# மகிழ்ந்துரை

சொல்லின்பம் மந்திரம்போல் வேண்டுமென்று கூறும் பாரதி, தமக்குத் தொழிலே கவிதையென்றும், இமைப்பொழுதும் சோராமலிருப்பேன் என்றும் முழக்கமிடுகிறான்.

வலைக்குள் மலர்ந்த வனப்பும் அப்படித்தான். சகோதரர் பாலமுனை பாரூக் அவர்களும் இமைப்பொழுதும் சோராம லிருப்பதை மெய்ப்பிக்கும் வகையில் வலைதளத்தில் தன்னை இணைத்துக்கொண்டு எழுதிய கவிதைகளே இன்று நூலுருவம் பெற்றிருக்கிறது. இவைகள் கவிதைக் கீற்றுகளின் கட்டல்ல. காலத்தின் கண்ணாடி.

இரண்டு நூல்களுக்கு அரசு சாகித்திய விருது பெற்ற் நூல் ஆசிரியரின் கடந்த காலத்தை நினைவுப்படுத்தி வாழ்த்துச் சொல்லும் சகோதரர் தீரன் ஆர். எம். நவ்சாத் அவருடைய பாணி சிறப்பினும் சிறப்பாகும். பாவேந்தலுக்கு பாவாழ்த்து சொன்ன பாவலர் சாந்திமுகைதீன் அவருடைய சொற்களும் கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். தமிழ் இலக்கிய வரலாற்றின் பகுப்பை அழகாகச் சொல்லி நூல் ஆசிரியரின் அறிமுகத்தை மென்மையாக வெளிப்படுத்தி அணிந்துரை வழங்கி இருக்கும் சகோதரர் ஜவாத் மரைக்காயரின் அணிந்துரை இந்நூலுக்குச் சிறப்புச் சேர்க்கும். பாவேந்தல் பட்டம் பெற்ற ஐயா பாலமுனை பாரூக் அவர்களுடைய கவிதை நடை பாவேந்தரின் கவிதை நடை போலவே (ஒரு சில கவிதைகள்) இருப்பதை காண முடிகிறது. கவிதைக்குப் பொய்யழகு என்பார்கள். ஆனால், இந்நூலின் கவிஞர் பல கவிதைகளில் உண்மையையே அழகாக்கி இருக்கிறார் என இசைவாசி க.சிவராஜ் தனது சிறப்புரையில் குறிப்பிடுவது மகுடமாகும்!

வாசித்தால் எந்தச் சவாலையும் சமாளிக்கும் ஆற்றல் வரும். ஆற்றல் கொடுக்கும் என்கிறார் கவிஞர். உண்மை தானே. வாசித்தால் பிறவியே வரும். இன்னும் பல நூல்களை யாத்து சிறந்திட வாழ்த்தி மகிழ்கிறேன்!

அன்பன்

தமிழ்நெஞ்சம் அமின்
ஆசிரியர் ‘தமிழ்நெஞ்சம்’ இதழ் & இணையம் பிரான்ஸ்
editor@tamilnenjam.com

# ஆசிரியருரை

வலைக்குள் மலர்ந்த வனப்பு எனது முகநூல் கவிதைகளின் தொகுப்பு.

1970ல் தினபதி கவிதா மண்டலத்தில் அறிமுகமானவன், அன்றிருந்த குறைந்த எண்ணிக்கையிலான பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு படைப்புகளை அனுப்பி வைத்துக் காத்திருந்தவன், படைப்புகள் பிரசுரகளம் கண்டபோது பார்த்து மகிழ்ந்தவன், இருந்துவிட்டு எப்போதாவது நண்பர்கள் படைப்புகளைப் பற்றிக் கூறும் குறிப்புகளைக் கேட்டு சிலிர்த்தவன்..., இப்போது வலைப்பூ எனும் சுதந்திர வெளிதரும் வாய்ப்பில் முகநூலிலும் கவிதைகளை எழுதி வருகின்றேன்.

இலங்கையைப் பொறுத்தவரை, இணையம் தந்திருக்கின்ற வாய்ப்பை மூத்த எழுத்தாளர்களில் மிகச்சிலரே சிறப்பாகப் பயன் படுத்துகின்றனர். முன்னரே சஞ்சிகைகள் நூல்களில் எழுதிப் புகழ்பெற்றிருக்கின்ற சில எழுத்தாளரகள் எண்ணிம (digital), இலத்திரனியல் (electronic) இலக்கியங்களைக் கையாளும் ஆற்றல் பெற்று, புதிய இலக்கியச்சூழலிலும், பரந்துபட்ட சுவைஞர்களின் விருப்பங்களை, பின்னூட்டங்களை உடனுக்குடன் பெற்றுக் கொண்டு தொடர்கின்றனர்- பிரகாசிக்கின்றனர். இந்த வகையில், இணைய இலக்கியத்தில் வலைப்பூவில் இயங்கக் கிடைத்தமையும், வலைப்பூவில் மலர்ந்து விருப்பங்களாலும் பின்னூட்டங்களாலும் பிரபலம் பெற்ற கவிதைகளை நூலாக்கி வெளியிடக் கிடைத்தமையும் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது

1987ல் எனது முதலாவது கவிதைத் தொகுதி ''பதம்'' வெளிவந்தது. சமூக நடைமுறை சார்ந்த கவிதைகள் அதில் இடம் பெற்றன. 2009ல் சந்தனப்பொய்கை மத ஆன்மீகம் சார்ந்த கவிதைகளை உள்ளடக்கி வெளி வந்தது. 2010 - 2011 - 2012களில் படைப்பிலக்கியத் துறையில் எனக்கு மலர்ச்சியை ஏற்படுத்திய கொந்தளிப்பு, தோட்டுப்பாய் மூத்தம்மா, எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு ஆகிய நவீன காவிய நூல்கள் வெளியாகின. அவை அரச சாஹித்ய விருது சான்றிதழ்கள் என்பவற்றைப் பெற்றுத் தந்ததோடு விமர்சன அவதானிப்புக்களையும் ஈர்த்தன.

பின்னர் 2013ல் Limerick என்ற வடிவத்தில் ''பாலமுனை பாறூக் குறும்பாக்கள்'' தொகுதி வெளிவந்தது. இவ்வாறு பொருள் வடிவத்திலும், உருவத்திலும் மாற்றங்களைப் பெற்று வந்திருக்கின்ற எனது

படைப்புகளில் இன்னுமொரு வித்தியாசமான படைப்பாக ''வலைக்குள் மலர்ந்த வனப்பு'' வெளிவருகிறது. அரசியல், அழகியல், சமயம், சமூகம், கிராமியம் என்று மலர்ந்த வனப்புகள் வெண்பா, குறட்பா, சிந்து குறும்பா புதுக்கவிதை என விரிந்திருப்பது எனக்கு திருப்தி தருகிறது.

இந்த நூல வெளிவருவதில் என்னைவிட அதிகம் அக்கறை எடுத்துக் கொண்டவர் ''தமிழ்நெஞ்சம்'' அமின் அவர்கள். எனது முகநூல் லிங்கை மட்டுமே பெற்றுக்கொண்டு சிறப்பாக அதனை வடிவமைத்து தந்திருக்கின்ற அவருக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். அணிந்துரை வழங்கிய கவிஞர் ஜவாத்மரைக்கார், பேராசிரியர் இசைவாசி, பின்னட்டையில் என்னை வடித்த சந்தக் கவிமணி கிண்ணியா அமீரலி, பாவாழ்த்து வழங்கிய பாவலர் சாந்தி முகையதீன், வாழ்த்துரை வழங்கிய அபாபீல்களின் செயற்பாட்டு முதல்வர் நாவலாசிரியர் தீரன் ஆர் எம் நவ்சாத் ஆகியோருக்கும் இந்நூல் வெளிவருவதில் உதவிய அனைவருக்கும் இதயங்கனிந்த நன்றிகள்.

இனி - வலைக்குள் மலர்ந்த வனப்பில் நீங்கள் மகிழலாம்.

அன்புடன்,

பாலமுனை பாறூக்

# வலைக்குள் மலர்ந்த வனப்பு

# மலர்ச்சி

மலர்ந்த காலையில்
மலர்வோம் புதிதாய்..!
புதிய ஆள்
புதிய நாள்
என்று மலர்ந்த
எண்ணங்க ளோடு
தொடங்குவோம் பணிகள்..
பழையன கழிந்தே!



# வெற்றி

புன்னகையும் மௌனமுமாய்ப்
பூத்திருக்கும் மானிடர்க்கு
எந்நாளும் வெற்றி நிசம்



# முகமலர்

கோப்பையில் கோப்பியும் மனக்
கோப்பையில் அன்பும் நிரம்புக! முகமலர்
பூத்துக் குலுங்குக
புன்னகை வண்ணங்கள் பெற்றே !



## கவிதை

கருத்தினிலும் சொற்களிலும் உணர்ச்சி
கரைபுரளும் கவிதையதே கவர்ச்சி
பொருத்தமிலா வடிவம்
பொருந்திவராப் படிமம்
தருபவரால் கவிபெறுமா மலர்ச்சி?

## புதுக் கவிதை

படிம ஒப்பனையைப்
பகட்டாக்கி,மேனியினை
விகாரப் படுத்தி
வீண்புரளி செய்யாமல்
புதுமையென ஆடையினை
முழுவதுமே களையாமல்
அளவாய் அழகழகாய்
அணிந்து மணம் பூசி
வளைய வருகின்ற
வனிதை புதுக்கவிதை.

# விமர்சனம்

கவிதை நூல் விமர்சனக் கூட்டம்
விமர்சகர் அடுக்கினார்!
“அழகாய் இருந்தது அட்டை
பளபளத்தன தாட்கள்
தெளிவாய் இருந்தது எழுத்து
வரிகள் அமைந்தன மடித்து”

விழிகள் பிதுங்கிய சுவைஞன்
நிறுத்திக் கேட்டான்
“உள்ளதா ஐயா
உள்ளே கவிதை?”

## கவிமழை

“வானம் பூமியைப் பார்த்தது
பூமி வானத்தைப் பார்த்தது
பூமியைப் பார்த்தது வானமா?
வானத்தைப் பார்த்தது பூமியா?
பூமியா வானமா?
வானமா பூமியா?”
குனிந்த தலை
நிமிர்ந்து பார்த்தார் கவிஞர்.
“ஒரு முடிவெடுத்து
பின்னர் சொல்லுங்க கவிஞரே!”
போய்க் கொண்டிருந்தனர் சபையினர்.

## கூழ் முட்டைகள்

முட்டையிட்டு கொக்கரித்தது கோழி.
காகக் கூட்டிலும்
கிளிப் பொந்திலும்
குருவிக் கூட்டிலும்
வடிவம் புதிதாய்
மாற்றி மாற்றி முட்டையிட்டதாய்
பீத்திக் கொண்டது பெரிதாய் !
எட்டிப் பார்த்து
கூழ்முட்டைகள் என்று தெரிந்து
விட்டுத் துரத்தினாள்
வீட்டுக்காரி.

## கவிஞன்

பாடினான்
பாடகன் என்றார்கள்
பேசினான்
பேச்சாளன் என்றார்கள்
நடித்தான்
நடிகன் என்றார்கள்!
பொன் மொழிகள்
புதிர்கள்
விடுகதைகள்
துண்டு துண்டாக சொல்லிப் பார்த்தான்
கவிஞன் என்றார்கள்!
மகிழ்ந்து போனான் அவன்!

# ஏறுகவி

ஏறுகவி என்றெனக்குப் பேரு
எவர்வென்றார் தேர்தலிலே கூறு
பேரெதுவோ சொல்லிடுவீர்
போடுகிறேன் இடைவெளியில்
பாட்டுவரும் அவர்பெயரில் பாரு!

முன்னர்நான் பாட்டெழுதிப் போட்டு
முடிந்ததெலாம் பெற்றெடுத்தேன் கேட்டு
இன்றவர்கள் தோற்றதனால்
இனிஇவர்க்குப் பாட்டெழுத
வந்துள்ளேன் துண்டுதுணி சேர்த்து!

கட்சியெனில் மதமில்லை யென்று
காட்டித்தான் நான்மாறிக் கொண்டு
வெட்கத்தை விட்டெழுந்து
வேண்டியதைப் பெற்றெடுக்க
அப்படியே வந்துவிட்டேன் இன்று!

பலமேடை ஏறியுள்ளேன் அன்று
பழையபடச் சான்றுகளும் உண்டு
விதவிதமாய்ப் பாட்டெழுதி
வைத்துள்ளேன் "போமற்றில்"
பொருத்திவைப்பேன் இவர்க்குமதை நன்று!

அரசியலில் இருப்பவர்கள் ஞானி
அவர்கள்தான் நல்லகலை மானி
விருதுபெறப் போகின்றேன்
விடுங்களெனைப் பாட்டெழுத
பிரமுகர்கள் அவர்களினைப் பேணி!

# காழ்ப்புணர்வு

நகங்கள் வளர்ந்து நீண்டன வென்றால்
நாமெதை வெட்டு கிறோம்?
விரல்களை யன்று வெட்டுவ தெல்லாம்
வேண்டா நகங் களையே!
புரிந்துண ராமை வளர்ந்திடு மாயின்
வெட்டிட வேண்டு மெதை?
உறவினை யல்ல நட்பினை யல்ல
உதவாக் காழ்ப் புணர்வு!

பாழ்படும் எரிச்சல் புகைச்சல்கள் எங்கள்
பண்பினைக் கெடுத்து விடும்
தாழ்வு மனத்தின் செயற்பா டெல்லாம்
தன்முனைப் பாகி விடும்
ஆழ்மனத் தினிலே அன்பிலை யென்றால்
அமைதி கெட்டு விடும்
வாழ்வில் நட்பைப் பேணிடு வோர்க்கே
வாழ்க்கை மலர்ச்சி பெறும்

# அறிமுகம்

அவருனை அறியார் உன்நிலை புரியார்
அதனால் உளறு கிறார்
விடுநீ அவரை வேண்டாம் கவலை
வீணர் திருந் திடலாம்
தெரியா திருக்கும் வரையே நாய்கள்
குரைக்கும் அறி வாய்நீ
அறிமுகம் கிடைத்துப் பழகிட முடிந்தால்
அவையும் குரைப்ப தில்லை!

## ஆட்சி

இப்பொழுதும் நாங்கள் வந்திருப்பது
ஒன்பதாம்(9) இலக்க அறைதான்
ஆணி கழன்று
அது ஆறாகத்(6) தெரிந்தது!

## தேசியம்

மாற்றி வைத்தார்கள் மக்கள்
ஒன்று சேர்ந்து
பகிர்ந்து கொண்டார்கள் அவர்கள்
கூட்டுச் சேர்ந்து!

# இனவாதம்

உ
ய
ர
த்
தி
ல்
பறக்கிறது கொடி!
தொட்டுவிட முடியாத படி!
இன்னும் தான்
பி ரி க் கி ற தே
இன வாதக் கொசுக்களின் கடி
ஒற்றுமைப் படாத படி!

# அவலம்

வாழ அடிப்படை வாய்ப்பை வழங்காமல்
மீளக் குடியமர்த்தி; மேடைகளில்
ஓலமிட்டே
வாய்ப்பந்தல் போடும் விழல்களினை நம்பியிவர்
போய்விழுந்த காட்சி இது!



# இளமையில் கல்

இளமையிலே "கல்" என்று
இயம்புவது இதைத் தானோ?
இச்சிறுமி
தலையில் கல் சுமந்தாள்
தான் கற்கச் செல்லாமல்!!
பிழையெங்கே,?
கல்லாகிப் போன
உள்ளங்கள் மலிந்த தனால்
கல் சுமக்கப் போனாளோ
பிள்ளை இவள்?



# பசி நெருப்பு

பூனை படுத்துறங்கிப் போன அடுப்படியில்
பானை இறங்கிவிடப் பார்த்தானோ?
ஏனிங்கே
வந்து சுருண்டான்? வதக்கும் பசிநெருப்பில்
வெந்து விழுந்தானோ,.?ஆ...!



# பெற்ற மனம்

தள்ளாத மூப்பினிலும் தாமே தொழில்செய்து
உள்ள பொழுதுகளை ஓட்டுகிறார்
பொல்லாத
பிள்ளை பிரித்துப் புறமொதுக்கிப் போனான்தான்;
சொல்லார்கள் “சீ”யென் றிவர்!



# *நான்*

மாடிமனை கட்டி யதில்
வாழ்ந்தவனும் 'நானே'
கோடிபணம் சேர்த் தங்கே
குவித்தவனும் 'நானே'
நாத்திகனாய்க் கதை பேசி
வென்றவனும் 'நானே'
கூத்திகளோ டிரவு பகல்
கொஞ்சியவன் 'நானே'
சொத்து சுகம் சொந்த பந்தம்
என்றிவைகள் தானே
இத்தரையில் சேர்த்து வைத்தேன்
எல்லாமும் வீணே!
மக்கி மடிந் தழிகின்றேன்
மண்ணறைக்குள் நானே
இற்றிறந்து போனேனா
எலும்பேதான் நானா?
இதை விடவும் இதை விடவும்
இன்னும் அழிவேனா?
இதுவரையில் வாழ்ந்ததெது
கனவுலகம் தானா?



# அநாதை

உண்ண வழியிலாச் சின்னஞ் சிறிசிது
ஊத்தை உடுப் புடனே
இன்னும் அலையுது, என்ன நிலையிது
எவர்தான் உதவு வரோ?
தந்தை இறந்தனன் தாயும் "ஓடினள்"
தனயன் எஞ்சினனோ?
இந்தப் பிள்ளைதான் என்ன செய்யுமோ?
எவர்தான் உதவு வரோ?



# மத வெறி

மதம்பிடித் தலைகிற
மதவெறி யாளர்கள்
மறுபடி எழுவ தென்ன?
அணிவகுத் திவர்களும்
ஆட்களைத் திரட்டியே
ஆடிடும் ஆட்ட மென்ன?
மனங்களில் அன்பினை
மறுத்திவர் வெறுப்பையே
மார்க்கமென் றேற்ப தென்ன?
இனங்களுக் கிடையிலே
இன்னுமாய் விரிசல்கள்
இயற்றிடத் துடிப்ப தென்ன?
உரிமைகள் சலுகைகள்
ஒன்றுமே இல்லையென்(று)
இங்கிவர் தடுப்ப தென்ன?
ஒருகொடி என்றுநாம்
ஒன்றிணைந் திருக்கையில்
பிரித்திட நடப்ப தென்ன?
ஒருதாய் மக்களெம்
ஒற்றுமை குலைத்திடப்
புரிகிற சூழ்ச்சி யென்ன?
இருகரம் ஏந்தினோம்
இறைவன்நீ அறிந்தவன்
இடரினை நீக்கி வைப்பாய்!



# புது விதி

இன்னும் புதுவிதி இயற்றிட வில்லையோ
இதுதான் எந்த விதி?
பொன்னும் பொருளும் கேட்டவ ராஇவர்?
புசிப்பதற் கேது வழி?
கண்ணீர் உகுத்துக் கலங்கும் தாய்மனக்
கவலை தீர்ப்பவர் யார்?

பிள்ளை எழுகிறான்
கண்ணீர் துடைக்கிறான்
புதுவிதி சமைத்திட வோ?
“இல்லை”யென்பதே
இல்லை யென்பதாய்
ஏழ்மை அகற்றிட வோ??



# சிறகிழந்த சிட்டு

சிட்டாய்ப் பறந்து சிறகடிக்க வேண்டியநீ
முட்கம்பி வேலிக்குள் முடங்கினையோ?
யாருமுனை
விட்டுவிட்டுச் சென்றாரோ
வேலைக்கு இவ்வீட்டில்?
பெற்றோர்தான் உன்னைப்
பிழைப்புக்கு விட்டனரோ?
பெருநாள் அறிவாயோ?
பிள்ளையெலாம் கடைத்தெருவில்
வெடிபோட்டுக் குதுகலித்து
விளையாடித் திரிகையிலே
பெருமூச் செறிந்தபடி
பிள்ளைநீ நிற்கின்றாய்
அறிவாயோ உன்மார்க்கம்
அறியாய்நீ ஏங்குகிறாய்!
எதுதான் உன்மார்க்கம்
எவர்தான் அதைச் சொன்னார்?
பெருநாள் எது உனக்கு
பிள்ளைநீ அறிவாயா?



# *காதல் லீலை*

காரிகை ஏனிவள்
கண்ணீர் சிந்தினாள்
காதலர் நாளினிலே?
அழகிய இவளுடன்
பழகிய காதலன்
விலகியே விட்டானா?
அவள்
உடலினில் மாற்றம்
வரவர அவனும்
விடைகொடு என்றானா?
காதலன் என்றவள்
நம்பிய அவனே
காமுக னானா?
போய்வா என்றவன்
கை விரித் திட்டால்
தாய் தந்தையும
ஏற்பா ரா?



# வாசிப்பை நேசிப்பாய்

வாசிப்பை நேசிப்பாய்
வளமாக்கும் அது உன்னை!
வார்த்தைகளில் சொல்ல
வாராத இன்பத்தைத்
தருமுனக்கு வாசிப்பு
வாசித்துப் பார்
வாழ்வில் ஒரு திருப்பம்
ஒரு மாற்றம்
நீ பெறுவாய்!
உள்ளம் அமைதி பெறும்
மூளை சுறுசுறுப்பாய்
இயங்கத் தொடங்கி விடும
நீயோர் புதிய உலகத்தில்
சஞ்சரிப்பாய்!
வாசித்துப் பார்
உன் சிந்தையில் மகிழ்ச்சி தோன்றும்
புதிய நடத்தைகள்
புதிய பாத்திரங்கள
புதிய எண்ணங்கள் உன்னில் நிரம்பும
வாசிப்பை நேசிப்பாய்



கற்பனை அதிகரிக்கும்
திட்டங்கள் செழுமை பெறும்
நீ,.
மீண்டும் மீண்டும் பிறப்பாய்
நடைமுறை உலகிற்குப்
பொருத்தமுடை யவனாய்
புதியவனாய்,,,
நீ மாறி மாறிப் பிறப்பாய்!
வாசித்துப்பார்!
நீ ஒரு நூலில் மூழ்கி
வெளியே வருகிற போது
அந்த நூலின் நாயகனாய்
மாறி வருகிறாய்
வெற்றி தோல்வியை
சகிக்கும் மனிதனாய்
தேறி வருகிறாய்!
உனக்குத் தனிமை தெரியாது
சலிப்புத் தட்டாது
அலுப்பு வராது
தரமான தகுதியான நூல்களை
வாசித்துப் பார்
உன் உணர்வுகள் தூய்மை பெறும்
எண்ணங்கள் எழுச்சி பெறும்
வாசி
வாசித்தவற்றை வாழ்வில்
பிரதிபலித்துப் பார்
எந்தச் சவாலையும் சமாளிக்கும்
ஆற்றல் வரும்
நீ வெற்றி பெறுவாய்
வாசிப்பை நேசிப்பாய்
வளமாக்கும் அது உன்னை!

# முகையவிழா மொட்டுகள்

மொட்டுக்கள் இங்கே
முழுவதுமாய் விரிவதற்குள்
கட்டவிழ்த்துப் பார்க்கக்
கயவர்கள் துணிகின்றார்
சிட்டுக்கள் சுதந்திரமாய்
சிறகடித்துப் பறப்பதற்கு
விட்டுக் கொடுக்காமல்
வீழ்த்துகிறார் வன்முறையில்
பட்டாம் பூச்சிகளின்
பலவண்ணப் பூஞ்சிறகை - தன்
இச்சைக்கு ஏற்றபடி
இழுத்துச் சிதைக்கின்றார்
சித்திரங்கள் நல்லதொரு
வண்ணத்தைப் பெறுவதற்குள்
அப்படியே தாள்களினைப்
பிய்த்தெறிந்து விடுகின்றார்



முத்துக்கள் பளிச்சிடவே
முடியாதபடி இங்கே
கட்டாந் தரையினிலே
கல்நெஞ்சர் உடைக்கின்றார்
எதிர்காலச்
சிற்பிகளாம் இந்தச்
சிறுசுகளின் கரங்களினைக்
கட்டிப் போட்டுவிட்டு
கடைமாந்தர் வதைக்கின்றார்
சட்டங்கள் பதினெட்டாம்
சரத்துக்கள் அனைத்தையுமே
செப்பிடினும் இங்கே
சீரழிவே தொடர்கிறது.,..!
உலகச் சிறுவர்தினம்
ஒருநாளில் கொண்டாடி
முழுவதுமே மறந்துவிட்டு
முன்னரைப்போல் நடப்பதெனில்
விழாக்களினால் ஏதுபயன்?
வீண்வேலை யாகாதோ?
இலக்கை அடைவதற்கு
இதயங்கள் இழகாதோ?

# கிறுக்கன்

இரவு முழுவதும் நிலவுப் பெண்ணொடு
மறைந்து மறைந்து மகிழ்ந்து சுகித்த
சூரியக் கிறுக்கன்.....
கடலில் விழுந்து
எழுந்தான் குளித்து!
இன்பம் சுகித்த இவனை யாரும்
இடையிற் புகுந்து எழுப்பி விட்டாரோ?
கடமையில் யாரும்
குறை சொன்னாரோ?
சினந்து சிவந்து
தெரிந்தான் கிறுக்கன்!
தொடங்கும் போதே தீயாய்ச் சுட்டான்
ஆ...!
அவன் பார்வை
அனலாய்த் தெறித்தது!
கடூரமாகவே கடமை புரிந்தான்
விடுவதாய் இல்லை
வெறித்தான் புவியை;
குதித்துப் பாய்ந்து கொதித்துக் கொண்டே
உச்சியில் நின்றான்!
சூரியக் கிறுக்கன் தொடர்ந்தான் பணியை
குணதிசை தொடங்கிய அவனின் பயணம்
குடதிசைநோக்கியும் நீண்டு விரிந்தது.
குதித்தும் பாய்ந்தும் கடமை புரிந்தவன்
பாய்ந்த பாய்ச்சலில் சறுக்கி விட்டானோ?
குடை சாய்ந்து கிடந்தான்
குடதிசை வானில்.!

# உன்னில் ஒரு உலகம்!

பகலினிலும் நிலா வருமா?
நெற்றியிலே நீ இட்ட
பொட்டு!
முகவானில்
விண்மீனைக் காண வில்லை
கயல் மீன்கள்!
மழை வரத்தான் போகிறதோ
கருமேகம் திரண்டு வந்து?
உன் கேசம்!
பொங்கும் கடலாக
பொறுமைப் புவியாகக்
குன்றாக குழியாக
உன்
அங்கங்கள் உணர்வுகளை
அடுத்தடுத்து நோக்குகையில்
உன்னில் ஒரு உலகம்!



# அஸ்ஸலாமு அலைக்கும்

நான் கொழும்புக்குப் போறன்
ஒரு மாச காலம்
என்னோட கண்முழிச்சி
எனக்காக ஒபீஸ் வச்சி
மீற்றிங் வச்சி
திண்டுஉண்டு குடிச்சி
பலதும் செஞ்சீங்க
வெத்திக்கு
வெடிலும் சுட்டுக்
கொண்டாடிற்றம்.
நல்லா உங்களுக்கு
நானும் செலவழிச்சிற்றன்
எல்லாத்துக்கும்
காசிதான வாப்பா!
இனிநான் கொழும்புக்குப்
போறன்.
அஸ்ஸலாமு அலைக்கும்
தேவப்பட்டா மீண்டும்
சந்திப்பம்
அஞ்சி வருசத்துக்குப் பொறகு!
இடையில ஏதும் தேவப்பட்டா
கொழும்புக்கு காசோட வாங்க
நானும் எலக்ஷனுக்கு
செலவழிச்ச தான வாப்பா!

# நாங்கள் காங்கிரஸ்காரர்கள்

மூன்று நிறத்தில் சுவரொட்டிகள்
இருந்தன.
எல்லாவற்றிலும் அஷ்ரப்
இருந்தார்!
“நாங்கள்
காங்கிரஸ்காரர்கள்
காங்கிரஸ்காரர்கள்”
இரைச்சல்.
“முஸ்லிமா
மக்களா
தேசியமா
எந்தக் காங்கிரஸ்?”
கேள்வியும் சேர்ந்து
இரைச்சலாய்க் கேட்டது.
“ஒன்றுமில்லை”
“தோதுக் கேற்ப
ஊர்ஊர் காங்கிரஸ்”
இந்தச் சத்தமும்
கூடியே வந்தது.
நின்ற இடத்தில் திரும்பிப்
பார்க்கிறேன்
படங்கள் எவற்றிலும்
அஷ்ரபைக் காணோம்.
இறங்கி அவரே
ஓடி விட்டாரோ?
சே!சே!

கோஷ்டிச் சண்டையில்
கிழித்திருப் பார்களோ?
ஒற்றுமை யெனும்
கயிற்றை...
பற்றி,.
பிடித்து,..
இழுத்துப்,,
பிய்த்திருப் பார்களோ?
மூன்று திக்காய்
இருண்டு தெரிவது
வானம் தானோ?
முழக்கம், இடி
மின்னல்!
வீட்டுக்கு வந்து கதவைப்
பூட்டினால்
தேர்தல் முடிவடையும் வரை
பஸார்ப் பக்கம்
போகாதே என்றது
மனசு!!

# *பறந்தது ‘‘காக்கா’’*

காட்டில்
இலைகள் உதிர்ந்து
சில
கிளைகள் முறிந்த
மரத்தின் கீழே
ஓடிக் களைத்த
குதிரையும்
விரித்த தோகையை
மடக்கிக் கொண்ட
மயிலுமாக வந்து நின்றன!
பேச்சு எழுந்தது.
சிங்கக் கொடுமைகள்,,
புலிதந்த வலிகள்...
என்று இவற்றைக்
கண்டு நொந்து
“வியூகம்” அமைத்த தாய்ப்
பேசிக் கொண்டன.
தங்கள் தங்கள்
தலைவர்கள் பற்றியும் பெருமைப் பட்டன!
“தேசியத் தலைவர்கள்”
என்றும் புகழ்ந்தன!
பறந்து வந்து
குந்தி யிருந்த
“காக்கா” கேட்டது.,.
“தேசியத் தலைவரா?”

பல இடங்களில்
பறந்து பறந்து பார்த்து வருகிறேன்
ஓரிரு இடங்களைத் தவிர
மரத்தையோ மயிலையோ
காணவே இல்லை.
குதிரை அங்குஓர் இடத்திலும்
இல்லை.
வேறொரு உருவம்
அசைந்து வருவதும்
இலைகள் அங்கே
காற்றில் அசைவதும்
கண்டு வருகிறேன்
இந்த அழகில்
தேசியத் தலைவரா?
என்றது “காக்கா”
“வியூ,,கம்” அமைக்கையில்
அவற்றையும் கூட
“விட்டுக்” கொடுப்பார்கள்
எங்கள் தலைவர்கள்
எனறன சேர்ந்து கதைத்த
மரமும் மயிலும்
குதிரையும்
“வெட்கம் கெட்டவை”
என்று எதையும் சொல்லி விடாமல்
பறந்து சென்றது “காக்கா!”

# சீஸன் 'பாவா'க்கள்

கொடியேற்றம் கந்தூரி
என்றாலே "பாவா"க்கள்
நிறையப்பேர் வருவார்கள்!
எங்கெங்கோ இருந்தெல்லாம்
அவர்கள் வருவார்கள்
இதுவரையில் இப்பக்கம்
வராதிருந்த சிலபேரும்
கொடியேற்றம் என்றால்
கூடி வருவார்கள்!
நிறநிறமாய் சட்டைகள்
பிறைவைத்த சால்வை
தலைப்பாகை யெல்லாம்
அணிந்து வருவார்கள்!
பாட்டு "பைத்"தென்று
பலதும் படிப்பார்கள்
"கிஸ்ஸாக்கள்" என்று
பழசுகளைச் சொல்வார்கள்!
"மஸ்அலாக்கள்" சொல்லிப்
பிரிப்பார்கள் நொடிபோல!
வெட்டுக் குத்துக்கும்
குறைச்சல் இருக்காது!
இப்பொழுது
ஊரெல்லாம் சோடனைகள்
ஒலிபெருக்கி,..மேடைகள்..
கொண்டாட்டம்..கொண்டாட்டம்,.
வந்துள்ளார் "பாவாக்கள்"
யார்சொன்னார் தேர்தலென..?
இவர்கள்
அவர்க ளல்ல!!

# ஆதரவாளன்

காலையிலே வந்தோம்
கையிலவர் நோட்டீஸொடு நின்றார்
ஆதாரம் கணக்கெல்லாம் காட்டி
அவர்மேலும் சான்றுபல நீட்டி
வெல்லுமிந்தப் பாட்டி...
வேறென்ன போட்டி?
என்றெமக்கு விளக்கங்கள் சொன்னார்

மாலையிலே வந்தால்
ஆளையிங்கு காணோம்
(கை)மாறியதாம் ஏதோ?
மாற்றியவர் யாரோ?
அவரிப்போ வேறுஒரு பாட்டி...!!

# *பிரதிநிதி*

கும்பிட்டான், நின்று
குழைந்தான், உறவென்றான்
நம்பித்தான் இட்டோமே
நம்வாக்கை - எம்பியென
வந்தான், மறந்தான்
வருகின்றான் மீளவுமே
மைந்தனாம் மண்ணுக் கிவன்!

# வேட்பாளன்

ஊருக்குள் மக்களிடம்
ஓடோடி “வோட்”கேட்டு
“காரு”க்குள் வந்தவனைக்
கண்டீரோ? - பாரங்கே
“பார்”வைத்துச் சேர்த்துப்
பெயரெடுத்த “பேராளன்”
தேர்தலிலே நிற்கின்றா னாம்!

VOTE
CAR
BAR

# எம்பி வேலை

ஊருக்கு ஓரெம்பீ கேட்டவரே,நானுங்கள்
ஊருக்கே கொண்டுவந்தேன் ஓரெம்பீ - தாருங்கள்
பேரென்று கேட்கப் பிரிந்தெழுந்த
சண்டையினால்
ஊரே இரண்டுபட்ட தாம்!

## வாக்குக் கணக்கு

கணக்கென்று மேடையெலாம்
காட்டும்இத் தம்பி
கணக்கில் பெயிலான வர்!

## தேர்தல் மேடை

பேச்சில் பொருளெதற்குப் பேசுவான்
மேடையிதில்
மூச்சும் விடாமலே தான்!

## தும்பி

தரவேண்டும் ஊருக்கோர் எம்பி
தவறாமல் எனக்கும்தா தம்பி
பிரதேசம் ஊரு
பேசாமல் ஏது?
மறுப்பீரேல் பறக்கும் இத் தும்பி!

## தேசியப் பட்டியல்

வாக்குகள்தான் குறைந்துவிடத்
தம்பி
வாடித்தான் கிடந்தவராம்
வெம்பி
போட்டனராம் பட்டியலில்
போனாராம் மாப்பிளையாய்
ஆர்ப்பரிப்பு, ஆள்இப்போ
எம்பி!

## பட்டியல்

இன்னும்தான் இருக்குதாம்
பட்டியல்
இதைவைத்தே நடக்குதாம்
அரசியல்
இன்னுமொரு மீதி
இருக்குதெனச் சேதி
இதைநீங்க யாருக்குத்
தருவியள்?

## பிரமுகர்

பட்டியலில் இடம்விட்டார் பாரு - அட
பதவியினில் இல்லை அந்த ஸாரு - இனி
விட்ட இடம் நிரப்பவென
விரைவார்கள் பிரமுகராம்
யாரு? அதைப் பாரு!

# அழைப்பு

சொத்து விபரத்த
சொல்லுவம் நாங்க
சீ டீ யப் போர்ரவர்
போட்டுட்டுப் போங்க
மக்களே உங்களுக்
கென்னங்க நீங்க
மாநாடு நடத்துறம்
வந்திற்றுப் போங்க!

# புதுவித அழைப்பு

“பிடுங்கி நாட்டும் பெருவிழா!” அழைப்பு
விடுத்தவர் இங்குள புதுவித அமைப்பு
அடிக்கல் நடநட
உளவாம் பலபல - அகற்றி
புதிதாய் ஒருகல் நடவாம் : மலைப்பு!

# தலைமகன்

எட்டாக் கனியென
எட்டா திருந்தது
எட்டில்
எட்டிற்று.
கெட்டவர்
துட்டர்
கொட்டங்க ளிங்கொரு
மட்டுக் கடங்கிற்று.
எட்டொன் றில்நாம்
பெற்றுக் கொண்டதை
விட்டுக் கொடுப்பேனா?
எப்பொழுதும் நான்
மக்களின் பக்கம்
என்றார் தலைமகனார்!

இப்பொழு தந்தத்
தலைமகன் எங்கே?
மக்கள் கேள்வி இது!
சத்தியம் வெல்லச்
சலசலப் படங்க
தலைமகன் பதிலு மெது?

## சீதனம்

வேண்டாம் எனக்கெதுவும்
வீடு வளவென்று
வேண்டாமே சீதனமாய்
வேறெதுவும் - மாண்டாலும்
நானெதுவும் கேளேன்,
நமது குழந்தைக்காய்
மானேநீ சென்று மடக்கு!

## நாயகன்

நோய்வந்து நடிகையவள் இறக்க - வளர்த்த
நாய்நின்று அழுதழுது குரைக்க - மணந்த
நாயகனோ வந்தான்
நாலுகால் பறக்க
வாயெல்லாம் சாராயம் நுரைக்க!

# நிறைவெறி

பணிப்பெண்ணாய்
சவுதிக்குப் பறந்தாள்
பிரிவாலே
கணவரவர் கரைந்தார்
மாதங்கள் கடந்துவிட
மாதவளும் காசனுப்ப
மறந்துவிட்டார் "நிறைவெறி" யில்
மிதந்தார்!



## புதுசு

அவதானம் பிள்ளைகளே என்றாள்
அவள்கணவர் தலையசைத்துக் கொண்டார்
விமானத்தில் அவள்ஏற
விடுதியிலே சேர்த்துவிட்டு
அவள்பணத்தில் புதுச்சோடி கண்டார்!

## துணை

எழுபதையும் தாண்டியபின் மாலை
ஏந்தியவர் ஏற்றாரோர் வாலை
ஏனென்றால் அதனை
இவர்சொன்னார் பதிலை
எடுத்துதவ.. சோர்ந்துவிழும் சீலை!

## *ஒற்றுமை*

சோனகர்கள்... நாங்கள்தான் “உம்மா”
சோர்ந்தேநாம் இருப்போமா சும்மா?
ஆனைவைத்துக் கட்டியவர்
ஆளுக்காள் அடிபடுவோம்
ஆ,.!வெட்டு.., குத்துக்கள் கும்மா!!

## *ஏ...மாற்றம்*

மாறும் மாறும் மாறும்
மாற்றம் நிசம்தான்
என்று முழங்கினார் அரசியல்வாதி.
ஏமாற்றமுமா என்று கேட்டான்
வாக்குப் போட்டவன்

## சின்ன வீடு

மனைவியினைத் தொழில்புரிய விட்டார்
மாதவளோ போய்ச்சேர்ந்தார் கட்டார்
இனிநமக்கோர் வீடமைப்பீர்
என்றவளும் பணமனுப்ப
எடுத்துவிட்டார் "சின்னவீடு" கட்டார்



## அழகி

செவ்வாய்ச் செல்வி
சிகப்பி அழகி,
அவ்வாய் திறந்தாள்
ஆ,.அவளா இவள்..?

## கவி

முப்பத்தைந் தாண்டுகளின்
முன்னால்
முதல்கவிதை எழுதியவர்
அன்னார்
வற்றிவிடப் பின்னர்
வடிக்கவில்லை ஏதும்
(ஆயின்)
எப்படியும் அவர் ”கவியாம்“
முன்னாள்,...!!

## மான்

விடுகதையாய்க் கவிபொழியும்
கோனாம்
விரும்புகிறார் விழாவினையே
தானாம்
எடுத்தார்கள் விழாவை
இவர்மனைவிக் கேயாம்
இவளவரைச் சகித்திருந்த
மானாம்!

# வண்டு

மலர்விட்டு மலர்தாவி
வண்டு
மனம்போன போக்கினிலே
சென்று
தேனுறிஞ்சக் கண்டு
தானுரிந்து நின்று
கலாய்த்தவராம் கலங்குகிறார்
நொந்து!



## மறைப்பு

பணத்தையவர் வைக்குமிடம் அறிந்து
பாசமகன் எடுப்பதனால் பயந்து
காசையந்த மகனின்
கணிதபாட நூலில்
வைத்துவிட இருக்கிறதாம் தொடர்ந்து!

## லேற்

காதலனைக் கன்னியெதிர் பார்த்து
கால்கடுக்க நின்றிருந்தாள் காத்து
காதலனோ லேற்று
காலமது வேஸ்ற்று
சென்றுவிட்டாள் நின்றவன்கை கோத்து!

## மாப்பிள்ளை

மாப்பிள்ளை ஊர்வலத்தில்
எடுப்பாம்
வழிமுழுதும் பாவாடை விரிப்பாம்
மாப்பிளையைக் கண்டதுமே
மயங்கினளாம் மாமி, இவர்,
மாமியுடன் படித்ததொரே வகுப்பாம்!

## வர(ா)கவி

வரகவியாம் மரபுவழிப் பேரு
வைத்தவர்யார் அவர்தானோ கூறு
தரவேண்டும் வெண்பாவில்
தரமான பாக்களென
வரும். ஆனா... வராதென்றார் பாரு!?

# மே தினம்

தலைநகரை நோக்கிவரும் பஸ்கள்;
“தண்ணி” - சோறு,
விலைகொடுத்து வாங்கிவரும் ஆட்கள்:
“வீரம்“ - கோஷம்
கலர் கலராய் மேடைகள்;
“கூத்து” - பேச்சு
“உழைப்பாளர்” தின மாமே;
ஓ... ஓ... நம்பு!



## கொதிப்பு

வார்த்தைகளில் பூசிவைத்தான் இனிப்பாம்
வஞ்சியிங்கே அவனோடு களிப்பாம்
ஏற்றெடுக்க வேண்டுமென
இவள்கேட்கப் பயந்தானாம்
மூத்தமனை மூணுமங்கே கொதிப்பாம்!

## பொன்னாடை

அறுநூறு ரூபாயாம் சால்வை
அதுதானாம் பொன்னாடை போர்வை
வருமாமே செலவின்னும்
வந்தெடுக்கும் போட்டோக்கும்
தருபவர்க்கே செய்வாராம் மேன்மை!



# கொழுப்பு

மன்மதனாம் அவருக்குள்
நினைப்பு
மறுப்பில்லை ஆள்நிறமோ
பழுப்பு
கந்தோரில் பெண்களிடம்
கைச்சேட்டை விட்டதனால்
பொங்கினராம். தொங்கியதாம்
கொழுப்பு!

# போதை

அற்புதமாய்ப் பாடல்
அவள்படித்தாள் மேடையிலே
செப்பம் அபிநயங்கள்
சீர்மையதாம்,.
பொத்தென்றம்
மான்வீழ்ந்து போனாள்
மயங்கித் தடுமாறி
ஏன்தான் குடித்தாள் இவள்?



# இயற்கை வனப்பு

உள்ளங் கையில்
ஒளிர்கிற மெழுகோ...?

தெள்ளத் தெளிந்த
நீரின் சிலிர்ப்போ...?

வெள்ளைக் கமல
உள்ளக் களிப்போ,?

சொல்லத் தெரியா
இயற்கை வனப்போ...?



# தங்கல்

கூரை இறந்து ரிச்சி
குடிசச் சுவர் கரஞ் சிரிச்சி
தாழ்ப்பாள் அறுந் திரிச்சி
தங்க வேற இடமி ரிக்கா



# முகநூல் மேனியா

இரண்டொரு வரியில்
ஸ்ரேற்றஸ் போட்டு
இரவிரவாக எதிர்பார்த திருந்தான்
முகநூல் தம்பி!
விருப்புகள் கொமண்டுகள்
வரும் வருமென்றே
புரட்டிப் புரட்டிப் பார்த்தான்
முகநூல்!

புரண்டு படுத்து
திடீரென விழித்தும்
இருட்டில் முகநூல்
பிரித்துப் பார்த்தான்!
இரண்டொரு லைக்குகள்
கொமண்டுகள் இருப்பினும்
வரவே இல்லையாம்
வழமையாய் லைக்கிடும்
அந்தச் சிறுக்கி!
முகம் அதுவீங்கி
கண்கள் சிவந்து
உடைந்து கிடந்தான்
முகநூல் தம்பி!



காலையில் வந்து பார்த்த வைத்தியர்
“முகநூல் மேனியா”(மோகினி)
அடித்து விரட்ட
வேப்பிலையோடு பன்னிறப் பூக்கள்
மேலும்
போன்கள். கணனி டெப்லற் போன்றவை
உடைத்துப் போட்டுக் காய்ச்சிய வெந்நீர்
வேண்டு மென்றாராம்!
கொடுத்ததில்
தம்பிக் கிப்ப கொஞ்சம்
சுகமாம்!!





# பேய்க் கதை

பேய்க் கதை கேட்ட
சின்ன மகனிடம்..
விரித்த கூந்தல்
வெள்ளை உடையுடன்
இரவில்
கால்கள் நிலத்தைத்
தொடாத வாறே
கையில் விளக்குடன்
வருமாம் பேய் எனச்
சொன்னார் அப்பா!

பார்த்திருக் கின்றேன்
நீங்கள் குடித்து விட்டுக்
கதவை உதைக்க
அம்மா நிற்பதைப் பார்த்திருக் கின்றேன்
என்றான் சின்னவன்.

பேய் என்றாலும்
பெண்ணின் உருவமா?
ஆர் சொன்னார்கள்
ஆண்கள் தானா?
உள்ளே இருந்து
உரத்துக் கேட்டது
பெண் குரல்!

# மழைநாள் இரவு

நாய் குரைத்த து
நேரம் நன்கு பிந்தி இருந்த து
ஊரில்
வீடு வந்து சேர்ந்தான் அவனே!

குளிர்
குளிரில் நடுங்கி
மேகப் போர்வையுள்
மேனியை இறுகப்
போர்த்தி இருந்த து நிலவு!

நெருப்புப் பொறிதான்
பறந்து வந்த தோ?
இமைகள் விழிகளை
மூட அசைகையில்
சட்டென மின்னல்
வெட்டி மறைந்த து!




உடைந்து போனதோ
வான மாமலை?
கரங்கள் காதினைச்
சேர்வதற் கிடையில்
முழங்கி வெடித்த து வானம்!

வெடித்துக் கீறல்
விழுந்து போனதாய்
இரைந்து பொழிந்த து
பேயாப் பெருமழை!

நடந்தேறு கின்றதோ
திருமண விழாக்கள்
துரவுகட் குள்ளே?
குரவை யொலித்த து
மாறி மாறியே!

வெளிச்சம் வந்த து வெளியே!
கதவு திறந்த து.
பளபளத்த து
நைட்டியில் நின்ற வீட்டு நிலவு!



# உள்ளப் பொருத்தம்

என்னை உனக்களித்தேன்
என்னுணர்வில் நீகலந்தாய்
கண்ணே சிலவருடம்
காத்தோம்நாம் - என்னவிது?
இன்னும் முடிவிலையே
ஏற்கவில்லை பெற்றோர்கள்
கண்மணியே நம்பருவம் பாழ்!

சாதகத்தைப் பார்த்துச்
சரியில்லை யென்றார்கள்
பாதகமாம் பார்த்த
பலபொருத்தம் - சோதனையோ?
உள்ளப் பொருத்தம்
உடையவர்கள் நாம்சேர்ந்தால்
எல்லாம் பொருந்தாதோ ஏன்?

வந்துவிடு சோதனைகள்
வந்தால் எதிர்கொள்வோம்
தந்துவிடு உன்னைத்
தயங்காதே - முந்திவிடு
காலம் கடந்து
கரைந்துவிட முன்னர்சொல்
வாழத் தகுந்த வழி!



# முக நூல்

(1)
அகமறியா நட்பு முகநூலில்: இன்பொக்ஸ்
சுகமும் அதுகாணு மாம்!

(2)
விருப்பும்,குறிப்பும் முசுப்புமிலா பேஸ்புக்
வெறுப்பாகும் என்ப தறி

(3)
நட்பெல்லாம் நட்பல்ல, 'லைக்' கால் மகிழ்வூட்டும்
நட்பே முகநூலின் நட்பு!

(4)
பதிவில் இரண்டுவரி பாராட்டா நட்பு
இதிலேனாம் விட்டுக் கழி.

(5)
இரவில் பதிவிட்டும் இன்னுமிலை 'லைக்' காம்
வரவில்லை யாமே அவள்!



# இந்தக் காலம்

(1)
மலைகளில் சிலைகளும் முளைக்கின்ற காலமிது
மதவெறி உச்ச காலம்
மனைகளை நிலங்களைப் பறிக்கின்ற காலமிது
மானுடஞ் செத்த காலம்
மலையென நம்பியோர் மறந்திட்ட காலமிது
மவுனமாய் இருந்த காலம்
மதித்தநற் பண்புகள் மறைந்திட்ட காலமிது
மடமைகள் மலிந்த காலம்!

(2)
பிரிந்துநம் கட்சிகள் போனதாம் காலமிது
பேதங்கள் நிறைந்த காலம்
பேணுதல் அற்றுநாம் பிரிந்திட்ட காலமிது
பிரிவினை இயக்க காலம்
அறியாமல் நாமிங்கே பலகூறு ஜமாஅத்தாய்
ஆனதால் நொந்து பட்டோம்
அருட்கொடை யான எம் அருமைநபி நாதரே
அண்ணலே யா ரசூலே!





# காத்திருப்பு

பாற்கிண்ணம் ஏந்தியவள்
பார்த்திருக்கப் பொய்யுரைத்து
காத்திருக்க வைத்த
கணவனெவன்? - ஏற்றெடுத்த
மானிதனை விட்டுவிட்டு
மாற்றாளை நாடினனோ
ஏனிவர்க்கு இந்தக் குணம்?

# ஏட்டில்தான் புகழ்ச்சி யெலாம்

ஏட்டில்தான் புகழ்ச்சியெலாம் ஏற்ற மில்லை
எதைப்பெற்றோம் எண்ணத்தில் மாற்ற மில்லை
காட்டில்தான் எறித்ததுவோ நிலவு?. இங்கே
கல்புகளில் புதுப்பொலிவைக் காண வில்லை!

பகுத்தாய்ந்து உணருகிற சக்தி, இந்த
மனிதருக்கே உண்டதனை நம்ப வில்லை
அதிஷ்டத்தை விதியினையே நம்பி நம்பி
ஆய்வின்றிக் கிடக்கின்றோம் எழுச்சி யில்லை

"மன்ஜத்த வஜத்த"வதில் மாற்ற மில்லை
மனிதர்கள் முயலாமல் மலர்ச்சி யில்லை
இன்ஸானே இயங்குகிற சக்தி, ஏற்று
இயங்காமல் இறைஉதவி கிடைப்ப தில்லை

சிந்தனையில் ஆய்வில்லை செயற்பா டில்லை
சீரான வாழ்வில்லை சிறப்பு மில்லை
வந்தனைகள் மட்டும்தான் வாழ்க்கை யில்லை
வாழாமல் பிரபஞ்ச வெற்றி யில்லை

வாழ்க்கையெனில் எதுவென்று அறிய வில்லை
வாழாமல் இருப்பதிலே அர்த்த மில்லை
ஆள்பவனாம் அல்லாஹ்வைத் தொழுது கொண்டு
அவனவனே முயலாமல் வாழ்க்கை யில்லை

எண்ணம்தான் செயலாகும்.ஏற்க வில்லை
எதுவென்று அதனைநாம் புரிய வில்லை
முன்னேற்றம் வளர்ச்சியென எதுவு மில்லை
முயலாமல் நன்மையிலை தீமை யில்லை

எண்ணம்தான் செயற்பாடாய் ஆன போதும்
இதுஒன்றும் சூனியத்தில் பிறப்ப தில்லை
கல்விநிலை கலாசாரம் சூழ லென்று
கலக்காமல் எண்ணமது எழுவ தில்லை

மெய்யறிவு இல்லாமல் மேன்மை யில்லை
மனிதன்தான் இயங்காமல் விருத்தி யில்லை
கல்லைத்தான் இறைவனவன் படைத்தான், இங்கே
கண்ணாடி யாக்குபவன் மனித னன்றோ?

புலனறிவு பகுத்தறிவு அல்லாஹ் வைத்தான்
பொருளறியா மூடரென வாழ்வ தற்கோ?
இலைநாங்கள் மூலத்தை இழந்து விட்டோம்
ஏனோநாம் கோட்பாட்டில் மாறு பட்டோம்

இஸ்லாத்தின் மூலத்தை இழந்து விட்டோம்
எதைஎதையோ நம்புகிறோம் அதனால் கெட்டோம்
அல்லாஹ்வின் பிரதிநிதி மனித னென்று
அறிந்தாலும் திருந்தாமல் பிழையே செய்தோம்

ஏட்டில்தான் நம்புகழ்ச்சி,கோட்டை விட்டோம்
எதையெதையோ மார்க்கமென ஏற்றுக் கொண்டோம்
மாற்றாரின் கைநூல்கள் ஏந்திக் கொண்டு
மார்க்கத்தை சடங்காக மாற்றிக் கொண்டோம்

மார்க்கத்தின் மூலத்தை அறிய வேண்டும்
மனம்வேணடும் எண்ணத்தில் மாற்றம் வேண்டும்
ஏட்டிலுள புகழ்ச்சியினை மீட்க வேண்டும்
இதுஎங்கள் தேட்டத்தால் மிளிர வேண்டும்!

# தென்றலாய் வீசு

பூத்தனை ரமழான் பூவே
புனிதமாய் பூத்தாய், பூத்தோம்!

வறுமையில் வாடி நின்றோர்
வாட்டத்தை அறிய வைத்தாய்
பசியினை உணர்ந்தோம்,பூவே
பட்டினி உணர வைத்தாய்!

ஈகையை உணர வைத்தாய்
எமக்கெலாம்  மருந்தாய் வந்தாய்
ஓதலைக் கொண்டு வந்தாய்
உளமெலாம் நிறைய வைத்தாய்!

தானங்கள் தரும ம் என்று
ஸதகாவை வழங்க வைத்தாய்
வல்லோனை துதித்து நிற்கும்
தறாவீஹில் பெருமை சேர்த்தாய்!

லைலத்துல் கத்ர் என்ற
இரவினை வழங்கி,எங்கள்
பிரார்த்தனைக் கெல்லாம் நன்மை
பலமடங் காக்கி வைத்தாய்!

புனிதமே ரமழான் நோன்பே
சென்றுநீ மீண்டும் வாவா
தென்றலாய் வீசு,இன்பத்
திருநாளாய் வாவா பூவே!

பிறையினைப் பார்த்த அன்றே
பிரிந்தவ ரானோம் என்று
அறிந்துநீ சினக்க வேண்டாம்
இன்றுதான் நோன்பா,இல்லை
அடுத்த நாள் அடுத்த நாளா
என்றுநாம் பிரிந்தோ மென்று
எண்ணிநீ வருந்த வேண்டாம்!

அமல்களால் நிறைந்த பள்ளி
தீசென்றதும் அடுத்த நாளே
வெளிச்சமும் அற்றுப் போன
வேதனை தெரிய வேண்டாம்
தொழுகையில் பிரிந்தோ மென்ற
தொடர்கதை தெரிய வேண்டாம்
தறாவீஹ் எட்டா,இல்லை
இருபதா.. ஏழா.. என்று
தொழாமலே விட்டோ மென்ற
சங்கதி உனக்கு வேண்டாம்!

பிரிந்து தான் தொழுவோம்,நாங்கள்
பெருநாள் தொழுகையை என்று
வருந்திட வேண்டாம்,பூவே!
மைதான மொன்றில் விட்டால்
பள்ளியில் பிரிந் திருந்தே
தொழுதிடத் தயாராய் உள்ளோம்

ஆதலால் இவற்றை யெண்ணி
கலங்கிட வேண்டாம் பூவே!
தென்றலாய் வீசு,இன்பத்
திருநாளாய் வாவா பூவே!

# சம்மதம் சொல்

ஆற்றோரம் நீண்டு..,அகன்றிருந்த வீதியிலுன்
வீட்டருகே கண்டேன் விலைகேட்டாய் - கேற்றடியில்
மீன்வாங்கிக் கொண்டிருந்த மீன்விழியே, என்னுள்ளம்
ஏன்வாங்கிக் கொண்ட துனை?

முக்காட்டு மேகம் மறைத்த முகநிலவு
அக்காலை வேளையிலென் ஆச்சரியம் - சொக்கிவிட்டேன்
பாதி தெரிந்தமுகம் பால்வெண்மை,உன்வதனச்
சோதி எனைஈர்த்த தேன்?

மகர்தருவேன் உன்னை மணவாழ்வுக் கேற்பேன்
புகலுன்றன் சம்மத த்தைப் பூவே - அகமினிக்க
இல்லறச் சோலையிலே இன்பம்நாம் பெற்றிடவே
சொல்வாய் உனதன்பைத் தான்!

பாலமுனை பாறூக்




# *சம்மதம் மச்சான்*

மீன்வாங்க வந்தவளை மோக விழியலைக்குள்
தான்வாங்கிப் போறவரே! சம்மதந்தான் - நான்ஏங்கித்
தூக்கந் தொலைத்திருந்தேன் சொந்தமொற மச்சான்என்
ஏக்கத்தைத் தீர்த்துவைத்தீர் இன்று!

என்வதனச் சோதியுமை ஈர்த்ததுவா?மச்சான்நான்
நின்றழுது "கேட்டதுஆ"
நீர்த தும்பக் - கண்கலங்கிக்
கல்பால் அழுதேன்நான் கண்திறந் தான்"றப்பு"
நல்லபடி நாமிணையத் தான்!


மச்சானே நீங்கள் மஹர்தந் தெனைமணக்க
இச்சை யுடனிருக்க ஏன்கவலை? - இச்சிட்டுக்
'கிச்' சிட்டுக் காணுங் கனாவிட்டு..நம்'வெடிங்காட்'
அச்சிட் டழைப்பிட்டு வா!

கிண்ணியா அமீர்அலி



# கிளி அஞ்சல்

அலியும் கிளியும்




காகத்தைத் துரத்திக் காப்பாற்றி,வந்த
ஆபத்தைத் தடுத்தேன்
அடைக்கலமாய்க் கிளிக்குஞ்சு!
பொத்திப் பிடித்த கரம்
பூ மெத்தை யாயிற்று!
எங்கள் சிறுகுடிசை
கிளிக்கிப்போ நந்தவனம்..!
சின்ன மகளுக்குத்
தோழியாயிற்றென்
செல்லக் கிளிக்குஞ்சு!
தத்தி நடக்கிறது
தாவிப் பறக்கிறது
"வாப்பா" சொல்கிறது
"உம்மா" என்கிறது
அச்சு நுச்சென்று
மகளை அழைக்கிறது
ஒன்றாய் அமர்கிறது
உண்டு மகிழ்கிறது
உற்சாகக் கிளிப் பிள்ளை!
ஒருகவலை அதுக் கில்லை!
பாவம் தாய்க்கிளி!
தன்குஞ்சைத் தேடி
அது
எங்கு பறக்கிறதோ..?

“இவனது அரவணைப்பில்
ஒரு குறையும் எனக் கில்லை”

அழாதே தாயே!
அலியும் கிளியும்
நல்ல சுகம்.

கிண்ணியா அமீர்அலி



# பதில் அஞ்சல்

கிலிபிடித்து வருந்தி
கிளிநான் அலைகையிலே
அலியும் கிளியும்
அத்தோடுன் மைனாவும்
சுகமென்று நீ சொன்னால்
சுகம் வருமா எனக் கிங்கே?
அகம்நொந்து நிதம்வாடி
அன்னைநான் அழுகின்றேன்

என்குஞ்சைக் காணாமல்
ஏங்கித் தவிக்கையிலே
அன்னையென் பாசத்தை
அறியாமல் நீயிருந்து
வார்த்தைகளில் சும்மா
வர்ணத்தைப் பூசுகிறீர்!
கோத்த உன் கவிச் சொற்கள்
ஆற்றிடுமோ என் துயரம்..?

கூட்டில் என்குஞ்சைப்
போட்டு வளர்க்காதே
பூட்டைத் திறந்து விடு
புறப்பட ட்டும் என்குஞ்சு
கிளிநான் உன்னிடத்தில்
கெஞ்சுகிறேன் இரங்கிவிடு
அலிநீ என்குஞ்சை
அனுப்பிவிடு மறுக்காமல்!

பாலமுனை பாறூக்

## *ஹாவா - ஆகா*

நல்லதொரு பானம்தான் ஹாவா
நம்மூரில் தயாரித்தார் தாஹா
பொல்லாத கஞ்சாவைப்
போட்டாரோ அதற்குள்ளே
அல்லாஹ்வின் குத்ரத்தோ ஆஹா!

(கவிஞர் ஊடாடியின் குறும்பா அது. கவிஞர் எம்.எல்.எம். அன்ஸார் முகநூலில் பதிவு செய்திருந்தார்)

*பதிலாக அமைந்த எனது குறும்பா இது.*

பானமதைத் தயாரித்தார் தாஹா
பருகத்தான் வேண்டுவதோ ஹாவா
போகாமல் விடுதம்பி
போய்விடுவாய் நீவெம்பி
பருகாதே அதுநமக்கு ஆகா!


# இரண்டு கடிதங்கள்

*பன்முக ஆளுமை கொண்ட காப்பியக்கோ*
*டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் அவர்களின்*
*“வல்லுவம்“ கவிதைத் தொகுதியை படித்துவிட்டு,*
*அவருக்கு வரைந்த மடல்*

வல்லுவம் என்கரத்தே வந்தடையத் தானெடுத்து
மெல்லச் சுருக்கிழுத்து மேய்ந்தேனங்(கு) - உள்ளதுவோ
நல்லகவித் தேன்சுளையாம் நும்பாக்கள் அள்ளியெடுத்(து)
எல்லாம் சுவைத்தேனே நான்

வள்ளுவனும் கம்பனுமாய் வந்தார்கள் நூலுக்குள்
நல்லதமிழ்ப் பாவமுதம் நானுகர்ந்தேன் - சொல்தேர்ந்து
வெல்லம் குழைத்து விருந்துதரப் பூரித்தே
உள்ளம் குளிர்ந்தேன் உணர்

காப்பியக் கோதந்த பாப்பையாம் வல்லுவத்துள்
போட்டிருந்த பாக்கள் புதுவாசம் - கோத்தெடுத்து
வார்த்தைகளில் தேன்வார்த்து வைத்துள்ள பாவடிவைப்
பார்த்துப் பயின்றேனே நான்



## காப்பியக் கோவின் பதில்

வழுவறநீ வெண்பா வடித்திருந்தாய் நண்பா
மொழிவளமோ உன்றன்கை வாகாம் - செழுமையுறக்
கோத்த வரிகள் குதுகலத்தைத் தந்ததடா
தீந்தமிழின் பாகுண்ட போல்

மூன்றுகவி முத்துக்கள் மாசறுநல் லுள்ளத்தின்
சான்று பகர்ந்ததெனல் சத்தியமே - மூன்றும்தேன்
மாபலா வாழையெனும் முக்கனியும் போலாகும்
நீபுலவன் மெய்யென் றுணர்

ஊன்றிப் படித்து உளமோர்ந்து பாநயந்து
சான்றுரைத்தாய் என்னைச் சிறப்பித்தாய் - சான்றுரைப்பேன்
எல்லோர்க்கும் இல்லா இதயம் உனக்கன்ப
நல்லாய் நலஞ்சேர்க வே!

# *பானம் 01 பாத்திரம் 04*

*பாத்திரம் **01***
குறும்பா.

பக்கத்தில் படுத்திருந்த மாது
பார்வதியாள் அவர்மனைவி சாது
நித்திரையில் அவள்கணவர்
நித்தியாவென் றரற்றியதால்
பத்தினியாள் மிரண்டவரோ கோது!

*பாத்திரம் **02***
வெண் (குறும்) பா


பக்கத்தில் தான்படுத்த
பார்வதியைக் கட்டியவன்
நித்திரையில் ஏனழைத்தான்
நித்தியாவை - பத்தினியாள்
சற்றுமெதிர் பாராமல்
சாத்தினளாம் கட்டிலொடு
அப்பினனாம் அந்தோ அவன்!

*பாத்திரம் 03*
காவடிச் சிந்தின் சீரமைப்பில் அமைந்த குறும்பாக் காவடி

பக்கத்தில் படுத்திருந்த மாது - அவள்
பார்வதியே குணவதியே சாது - அட
நித்திரையில் ஏனழைத்தார்
நித்தியாவென் றேகணவர்
சாது மிரள கோது!

*பாத்திரம் 04*
சிலமீறல்களுடன் ஒயில் கும்மியின்
சீரமைப்பைப் பின்பற்றிய ஒயில் குறும்பா


பக்கத்தில் பார்வதியாள் படுத்திருந்தாள் கணவரொடு
பதிவிரதை மனைவியவள் சாது
நித்திரையில் கணவரவர்
நித்தயாவென் றரற்றியதால்
பத்தினியாள் மிரண்டவரோ கோது!





1987
(கவிதை தொகுதி)





2009
(கவிதைத் தொகுதி)




2010 குறுங்காவியம்
(இலங்கை அரசின் சாஹித்ய மண்டலச் சான்றிதழ் பெற்ற நூல்)




2011 குறுங்காவியம்
(இலங்கை அரசின் சாஹித்ய மண்டல விருது பெற்ற நூல்)




2012
(குறுங்காவியம்)




2013




**மேற்கண்ட நூல்கள்**

www.tamilnenjam.com/ebooks/

**இணையத்தில் இடம் பெற்றிருக்கிறது.**
**அஞ்சலிலும் பெறலாம்.**
**படித்து கருத்துகளை எழுதுங்கள்!**

farookpalamunai@gmail.com